## 6.40 கோடி டன் உணவுப் பொருள்கள் கையிருப்பு

First Published : 01 Oct 2011 12:00:00 AM IST

புது தில்லி, செப்.30 : நாட்டின் பல்வேறு கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் கையிருப்பு, கடந்த ஜூலை மாதம் முதல் தேதி நிலவரப்படி, 6.40 கோடி டன் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது வெள்ளிக்கிழமை மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :

அரசு கொள்முதல் செய்த வகையில் நாட்டிலுள்ள பல்வேறு கிடங்குகளிள் சேமித்து வைக்கப்பட்டுள்ள கோதுமை, அரிசி போன்றவற்றின் கையிருப்பு 6.40 கோடி டன்கள் ஆகும். இதில் அரிசி 2.68 கோடி டன்னாகவும், கோதுமை 3.71 கோடி டன்னாகவும் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் தேதியன்று இந்திய உணவு கழகத்தின் ( எஃப்.சி.ஐ) கையிருப்பில் 2.12 கோடி டன் அரிசி, கோதுமை இருக்க வேண்டும் என்பது மத்திய அரசின் விதிமுறையாகும்.

உணவு பொருள்கள் கொள்முதல், அவற்றின் விநியோகத்தை மத்திய அரசின் சார்பில் இந்திய உணவு கழகம் செய்து வருகிறது. 2010-11 ம் ஆண்டு ஜூலை 1 ம் தேதி வரையிலான காலத்தில் ( அக்டோபர்-செப்டம்பர் வரையிலான கரீப் பருவத்தில் ) 3.10 கோடி டன் அரிசியை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 2.97 கோடி டன்களாக இருந்தது.

2011-12 ம் ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான ராபி பருவ பயிர்களை விற்பனை காலத்தில், 24.15 டன் உணவு தானியங்கள் உற்பத்தியாகியுள்ளன. நடப்பு ஆண்டில் இது 2.45 டன் ஆக இருக்கும். மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்காக, கடந்த ஜுன் மாதத்தில் 28 லட்சம் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் 19 லட்சம் டன் நியாயவிலை கடைகள் மூலம் வழங்கும் பொது வநியோக திட்டத்திற்காகவும், 90 லட்சம் டன் மற்ற திட்டங்களுக்காகவும் கொள்முதல் செய்யப்பட்டது அடங்கும்.

## குப்பைக்கு போகும் செண்டுப்பூ

பதிவு செய்த நாள் : அக்டோபர் 01,2011,21:38 IST

நிலக்கோட்டை : விலை சரிவால் நிலக்கோட்டை பகுதியில் செண்டுப்பூக்கள் (மாட்டுச் செவ்வந்தி), செடிகளில் இருந்து பறிக்கப்படாமல் உள்ளன. இப்பகுதியில் 125 எக்டேரில் இப்பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. மாலை கட்டுவதற்காக, இங்கிருந்து தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகின்றன. புரட்டாசியில் முகூர்த்தம் இல்லாததால், விலை கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. இதனால் பூக்களை பறிக்க விவசாயிகள் தயங்குகின்றனர். நிலக்கோட்டை பூ சந்தையில், மல்லிகை வரத்து குறைந்து, ஒரு கிலோ, 100 முதல் 130 ரூபாய் வரை விற்றது. செவ்வந்தி, சம்பங்கி, கோழிகொண்டை, முல்லை ஆகியவை 100 ரூபாய்க்கு குறைவாக விற்றன. ஒரு வாரமாக, செண்டுப்பூ, ஐந்து ரூபாய்க்கு தான் விற்றது. சந்தைக்கு சென்று வரும் செலவு, எடுப்புக் கூலிக்கு கூட கட்டுபடியாகாது என்பதால், விவசாயிகள், பூக்களை பறிக்காமல் விட்டனர். இதனால் பூக்கள் கருகி விட்டன. நேற்று முன்தினம், சந்தைக்கு வந்த பூக்கள், விற்காமல் குப்பையில் கொட்டப்பட்டன.

**உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு**

First Published : 30 Sep 2011 03:26:39 AM IST

புதுதில்லி, செப்.29: நாட்டின் உணவு பணவீக்கம் செப்டம்பர் மாதம் 17ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 9.13 சதவீதமாக உயர்ந்தது. இதற்கு முந்தைய வாரம் இது 8.84 சதவீதமாக இருந்தது.

பருப்பு, காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் விலை உயர்வின் காரணமாக, கடந்த 17 ம் தேதி வரையிலான காலத்தில் உணவுப் பணவீக்கம் 9.13 சதவீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, உருளைக்கிழங்கு, பருப்புகளின் விலை உயர்வு காரணமாக, உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

உணவு அல்லாத இனங்களின் விலையேற்றம் ( எண்ணெய் வித்துகள், தாதுக்கள், நூலிழைகள்) கடந்த செப்டம்பர் 10ம் தேதி வரை 12.89 சதவீதத்திலிருந்து இப்போது 17.42 சதவீதமாக உயர்ந்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால் உணவுப் பண வீக்கமும் 9 சதவீதத்திற்கு மேல் உள்ளதாக கூறப் படுகிறது. வெங்காயம் 17.40 சதவீதம், காய்,கனிகள் 11.98 சதவீதம், அரிசி 3.48 சதவீதம், பருப்பு 4.86 சதவீதம் என அதிகரித்துள்ளன.

செப்டம்பர் 10 ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், உணவுப் பணவீக்கம் 9.47 சதவீதத்திலிருந்து 8.84 சதவீதமாக குறைந்து இருந்தது.

பணவீக்கத்ததை குறைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது. இதை கட்டுக்குள் கொண்டு வர, கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து,வங்கி கடன்கள் மீதான வட்டிவிகிதங்களை 12 முறை ரிசர்வ் வங்கி உயர்த்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கவலை அளிக்கிறது : இது இரட்டை இலக்கத்தை தொடும் அளவுக்கு அதிகரித்துள்ள உணவுப் பண வீக்கம் உயர்வு மிகவும் கவலையளிப்பதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார். சாமான்ய மக்களை பாதிக்கும் உணவுப் பொருள்கள் விலை உயர்வு குறித்து மத்திய அரசுக்கு பெரும் கவலையளிப்பதாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

**நீலகிரியில் நீராதாரங்கள் சுரண்டப்படுகின்றன :தோட்ட அதிபர் கூட்டத்தில் குற்றச்சாட்டு.**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2011,23:06 IST

குன்னூர் : "நீலகிரியின் பல இடங்களில் நீராதாரங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால், சுத்தமான நீர் கிடைப்பதில்லை,' என நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. தமிழ்நாடு தோட்ட அதிபர்கள் சங்கத்தின் 120வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் குன்னூர் உபாசி அரங்கில் நடந்தது. சங்க தலைவர் ஜித்தன் பரேக் பேசியதாவது:

தேயிலை தோட்டங்களை ஒட்டியுள்ள இடங்களில் இருந்து இயற்கை நீராதாரங்கள், தேயிலை தோட்டங்களுக்கு உதவியாக உள்ளன. நீலகிரியின் பல இடங்களில் நீராதாரங்கள் பொதுமக்களால் சுரண்டப்படுகின்றன; ஆக்கிரமிக்கப்படுகின்றன. அவற்றில் குப்பை, கூளங்கள் கொட்டப்படுவதால், சுத்தமான நீர் கிடைப்பதில்லை.

இத்தகைய ஆக்கிரமிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும். தேயிலை எஸ்டேட் நிர்வாகங்களின் கணக்கு, வரவு, செலவு, வருமான வரி உட்பட விபரங்கள் காகிதம் மூலம் தயாரித்து சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்படுவதால், அதிக நேர விரயம் ஏற்படுகிறது; பணியை எளிமையாக்க இத்தகைய பணிகளை கம்ப்யூட்டர்மயமாக்கி, "இ-பேப்பர்' முறையை அறிமுகப்படுத்த வேண்டும். ஊராட்சி, பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தான் பெருமளவு தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன; எஸ்டேட் நிர்வாகங்கள் செலுத்தும் வரிதான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகப்பெரிய வருவாய் ஆதாரமாக உள்ளது. இருப்பினும், தேயிலை தோட்டங்களுக்குள் உள்ள தொழிலாளர்களின் குடியிருப்புக்கு தேவையான சாலை, நீர், தெருவிளக்கு, மருத்துவமனை வசதிகளை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தி கொடுப்பதில்லை. எஸ்டேட் நிர்வாகங்களே அத்தகைய வசதிகளை செய்து கொடுக்க வேண்டியுள்ளது. அரசு மருத்துவமனைகளில் எஸ்டேட் தொழிலாளர்களுக்கென பிரத்யேகமாக படுக்கைகளை ஒதுக்க வேண்டும். கோத்தகிரி என்.பி.ஏ., பாலிடெக்னிக் பயிற்சி கூடத்திற்கு எஸ்டேட் தொழிலாளர்களின் பிள்ளைகள் அதிகம் பேர் சென்று வருகின்றனர். அவர்களுக்கு போதிய பஸ் வசதி இல்லாததால், காலை, மாலை நேரங்களில் கூடுதல் அரசு பஸ்களை இயக்க வேண்டும். தேயிலை தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுவதால், வட மாநில தொழிலாளர்களை பணியமர்த்த வேண்டியுள்ளது. அவர்களின் நடத்தை, செயல்பாடுகள்

சந்தேகத்தை கிளப்பும் வகையில் உள்ளது என கூறப்படுகிறது. சில வட மாநில தொழிலாளர்கள் எதுவும் பேசாமல் அமைதியாக உள்ளனர்; அவர்களின் குணநலன் குறித்து எதுவும் அறிந்து கொள்ள முடிவதில்லை. வட மாநில தொழிலாளர்களை போலீசார், தோட்ட தொழிற்சங்கத்தினர் தான் கண்காணிக்க வேண்டும். தேயிலை தொழிற்சாலைகளில் இயந்திரம் வாங்க, தேயிலை வாரியத்தின் தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு, நிறுத்தப்பட்டுள்ள 25 சதவீத மானிய உதவியை மீண்டும் வழங்க வேண்டும். இவ்வாறு, ஜித்தன் பரேக் பேசினார்.

**எண்டோசல்பான் ஏற்றுமதிக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி**

First Published : 01 Oct 2011 12:00:00 AM IST



புது தில்லி, செப்.30 : நாட்டில் பயன்படாமல் உபரியாக இருக்கும் எண்டோசல்பான் பூச்சி மருந்தை ஏற்றுமதி செய்ய உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளது. எனினும், எண்டோசல்பான் உற்பத்திக்கு இப்போதுள்ள தடை தொடரும் என்றும் நீதிபதிகள் கூறினர்.

எண்டோசல்பான் பயன்படுத்துவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதுடன் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக புகார்கள் கூறப்பட்டன. இதற்கு எதிராக கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன.

இது தொடர்பான வழக்கில், எண்டோசல்பான் உற்பத்தி, விற்பனை மற்றும் அதன் பயன்பாட்டிற்கு உச்ச நீதிமன்றம் கடந்த மே மாதம் தடை விதித்தது. இதையடுத்து பயன்படாமல் உள்ள கையிருப்பை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்ய நிபுணர்கள் குழுவை கடந்த ஆகஸ்ட் மாதம் உச்ச நீதிமன்றம் அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு உச்ச நீதிமன்றம் 1100 மெட்ரிக் டன் எண்டோ சல்பான் ஏற்றுமதிக்கு அனுமதித்தது.

இந்த வழக்கு வெள்ளிக்கிழமை தலைமை நீதிபதி எஸ்.எச். கபாடியா தலைமையிலான பெஞ்ச் முன் வந்தது. ஏற்றுமதிக்கு அனுமதித்த நீதிபதிகள் சில பாதுகாப்பு விதிமுறைகளையும் தெரிவித்தனர். ஏற்றுமதிக்கு எண்டோசல்பான் பூச்சிக் கொல்லி மருந்துகள் பாதுகாப்பான

முறையில் சிப்பமிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை தயாரிப்பாளர்கள் மற்றும் சுங்கத்துறையினர் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் நீதிபதிகள் கூறினர்.